# மோட்டார் வாகன விபத்துக்கள் கோரிக்கை தீர்ப்பாயம், அவிநாசி

## அவிநாசி சார்பு நீதிமன்றம்,

## முன்னிலை : திரு.C.செந்தில்குமார், பி.காம்., பி.எல்.,

## சார்பு நீதிபதி, அவிநாசி

2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 02-ம் நாள் வியாழக்கிழமை

## M.C.O.P.No.39/2018

**in**

**(CNR.No.TNTI16-000-317-2018)**

ஜோதிமணி ... மனுதாரர்

//எதிர்//

1. குமாரசாமி
2. ரத்தினசாமி
3. நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
   அதற்காக அதன் மேலாளர், திருப்பூர். .. எதிர்மனுதாரர்கள்

| | | |
|---|---|---|
| (a) | இழப்பீடு கோருபவரின் பெயர் மற்றும் முகவரி | ஜோதிமணி, வயது 45, த/பெ.ஆறுமுகம், வசிப்பிடம் ஊஞ்சக்காடு,, செரவேலம்பாளையம், ராக்கியாபாளையம், கிராமம், அனைப்பாளையம் அஞ்சல், ஊத்துக்குளி R.S. வழி, ஊத்துக்குளி வட்டம், திருப்பூர் மாவட்டம். |
| (b) | எதிர்மனுதாரர்களின் பெயர் மற்றும் முகவரி | 1. குமாரசாமி, வயது 45, த/பெ.கருப்பன், வசிப்பிடம் கதவு எண்.111, மேட்டுக்கடை, காங்கயம் ரோடு, ஊத்துக்குளி R.S. ஊத்துக்குளி தாலூக்கா, திருப்பூர் மாவட்டம் – 638 752.<br>2.ரத்தினசாமி, த/பெ.மாணிக்கம், |

| | | |
|---|---|---|
| | | வசிப்பிடம் கதவு எண்.7/707–7, SPB கார்டன், பொங்கலூர், திருப்பூர் தெற்கு தாலூக்கா, திருப்பூர்<br><br>3.நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், அதற்காக அதன் மேலாளர், டிவிசனல் அலுவலகம், முதல் தளம், 18, நீதிமன்ற வீதி, குமரன் ரோடு கார்னர், திருப்பூர் 641 601. |
| (c) | பெயர் மற்றும் காப்பீடு நிறுவனத்தின் முகவரி | நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், அதற்காக அதன் மேலாளர், டிவிசனல் அலுவலகம், முதல் தளம், 18, நீதிமன்ற வீதி, குமரன் ரோடு கார்னர், திருப்பூர் 641 601. |
| (d) | மாநகர போக்குவரத்து கழகம் (அ) இதர இழப்பீடு தொகை செலுத்ததக்க எதிர்மனுதாரர்கள் பெயர் மற்றும் முகவரி | நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், அதற்காக அதன் மேலாளர், டிவிசனல் அலுவலகம், முதல் தளம், 18, நீதிமன்ற வீதி, குமரன் ரோடு கார்னர், திருப்பூர் 641 601. |
| (e) | இழப்பீடு கோரிக்கை மனு தாக்கல் செய்த தேதி | 04.06.2018 |
| (d) | உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதி | 02.07.2026 |
| (e) | பிறப்பிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை விபரம் | **ரூ.3,19,881/–** |
| (f) | வட்டி விகிதம் | 7.5% |
| (g) | எந்த தேதியிலிருந்து வட்டி தொகை செலுத்தப்பட | 04.06.2018 |

| | | |
|---|---|---|
| | வேண்டும் | |
| (h) | செலவுத்தொகை விபரம் | நீதிமன்ற கட்டணம் ரூ 2,570.00<br>முத்திரை கட்டணம் ரூ. 10.00<br>வக்காலத்து ரூ. 10.00<br>வழக்கறிஞர் கட்டணம ரூ. 5,398.00<br>----------<br>மொத்தம் ரூ. 7,988.00<br>---------- |
| (i) | உத்தரவின்படி இழப்பீட்டுத் தொகை வட்டி மற்றும் செலவுத்தொகையை யார் செலுத்த வேண்டும் என்பது சம்பந்தமான விபரம் | மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகை ரூ.3,19,881/-ஐ 3-ம் எதிர்மனுதாரர் செலுத்திவிட்டு, பின்னிட்டு வாகனத்தின் உரிமையாளரான 2-ம் எதிர்மனுதாரரிடமிருந்து அந்த தொகையை வசூலித்துக் கொள்ள வேண்டியது என்றும், பின்பு மனுதாரர் இத்தீர்ப்பாயத்தில் உரிய மனு செய்வதன் மூலம் நேரடியாக பெற்றுக் கொள்ளலாம் என்று உத்தரவிடப்படுகிறது. |
| (j) | மனுவில் பல கோரிக்கையாளர்கள் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு கோருரிமையாளருக்கும் இழப்பீட்டு தொகையில் கிடைக்கத்தக்க பாக விபரம் | பொருந்தத்தக்கதல்ல |
| (k) | இழப்பீட்டுத் தொகை எதன் மூலமாக எந்த வகையில் | இழப்பீட்டுத் தொகை முழுவதையும் இந்நீதிமன்றத்திற்கான இந்தியன் |

| | | |
|---|---|---|
| | செலுத்தப்பட வேண்டும் என்பது சம்பந்தமான விபரம் | பேங்க் கணக்கு எண்.7761848987 IFSC No.IDI000A157, Account No. V00820 என்ற கணக்கில் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. |
| (l) | இழப்பீட்டுத் தொகை கோருரிமையர் எவ்வாறு பெற்றுக் கொள்ளுவது என்பது சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவு விபரம் | 3-ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டுத் தொகை முழுவதையும் செலுத்திவிட்டு, பின்னிட்டு வாகனத்தின் உரிமையாளரான 2-ம் எதிர்மனுதாரரிடமிருந்து அந்த தொகையை வசூலித்துக் கொள்ள வேண்டியது என்றும், பின்பு மனுதாரர் இத்தீர்ப்பாயத்தில் உரிய மனு செய்வதன் மூலம் நேரடியாக பெற்றுக் கொள்ளலாம் என்று உத்தரவிடப்படுகிறது. |
| (m) | எந்த குறிப்பிட்ட காலத்திற்கு இழப்பீட்டு தொகைக்கான வட்டி கோருமையருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்ற விபரம் ஏதேனும் இருப்பின் | இல்லை |
| (n) | உத்தரவு பிறப்பிக்கட்டட தேதியிலிருந்து10 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய மீதி நீதிமன்ற கட்டணம் | ரூ.2,550/- |
| (o) | திருப்பி வழங்கத்தக்க | இல்லை |

| | | |
|---|---|---|
| | கூடுதல் நீதிமன்ற கட்டணம் | |

இம்மனுவானது 07.07.2018-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இருதரப்பு விசாரணை முடிவுற்று 11.06.2026-ம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் **திரு.V.சுந்தர்ராஜு** அவர்கள் ஆஜராகியும், 1-ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டும், 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் **திரு.M.சுந்தரமூர்த்தி** அவர்கள் ஆஜராகியும், 3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் **திரு.B.சோமசுந்தரம்** அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இத்தீர்ப்பாயம் வழங்கும்

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரருக்கு கடந்த 22.02.2018-ம் தேதியில் ஏற்பட்ட மோட்டார் வாகன விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடாக ரூ.10,00,000/- வழங்கக் கோரி மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு-166 ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனு.

2. **மனுவின் சுருக்கம்:-**

மனுதாரர் ஜோதிமணி கடந்த 22.02.2018-ம் தேதியன்று மாலை சுமார் 6.30 மணியளவில் சைக்கிளில் ஊஞ்சக்காடு, செரவேலம்பாளையம் ரோட்டில், மணியம்மாள் என்பவரது காட்டுக்கு அருகில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டின் ஓரமாக சென்று கொண்டிருந்தபோது, அப்போது எதிரே TN 42 B 3394 என்ற பதிவு எண்ணுள்ள மோட்டார் சைக்கிளை

அதன் ஓட்டுநர் 1–ம் எதிர்மனுதாரர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். விபத்தில் மனுதாரருக்கு இடது கால் முழங்காலுக்கு கீழ் பலத்த எலும்பு முறிவும் ரத்தக்காயமும் வலது முழங்கையில் பலத்த அடியும், இரத்தக்காயங்கள் ஏற்பட்டு, உடனே அருகில் இருந்தவர்கள் திருப்பூர் ARS மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டது. பின்னர் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்ளுக்கு ஊடுகதிர், நுண்கதிர் படங்கள் எடுத்து பார்க்கப்பட்ட போது எலும்பு முறிவுக்கு அறுவை சிகிச்சை செய்து இரும்புதகடு பொருத்தப்பட்டது. மேலும், மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு 22.02.208 தேதியிலிருந்து உள்நோயாளியாக சிகிச்சை எடுக்கப்பட்டு 27.02.2018–ம் தேதியில் மருத்துவமனையில் விடுவிக்கப்பட்டார். பின்னர் திருப்பூர், ARS மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் ஊத்துக்குளி உதவி ஆய்வாளர் மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஜோதிமணி என்பவரிடம் புகார் வாக்குமூலத்தை பெற்று ஊத்துக்குளி காவல்நிலைய குற்ற எண்.91/2018 இதச பிரிவுகள் 279, 337–ன் பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. 1–ம் எதிர்மனுதாரர் கீழமை நீதிமன்றத்தில் தண்டனையாக அபராதம் செலுத்தியுள்ளார். மேற்படி விபத்திற்கு காரணம் TN 42 B 3394 என்ற மோட்டார் சைக்கிள் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதையும் தான் காரணம் ஆகும். மேற்படி விபத்தில் மனுதாரருக்கு இடது கால் முழங்காலுக்கு கீழ் பலத்த எலும்பு முறிவும் இரத்தக்காயமும் வலது முழங்கையில் பலத்த அடியும், இரத்தக்காயங்கள் ஏற்பட்டு, அவர் திருப்பூர் ARS மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, அவருக்கு

மரபு வழி சிகிச்சை அளிக்கப்பட்டு, 27.02.2018-ம் தேதியில் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். மனுதாரர் விபத்து சமயத்தில் ஜோதிமணி திடகாத்திரமாகவும், உடல் ஆரோக்கியத்துடனும் இருந்து விவசாயம் செய்தும், பால் கறவை மாடுகள் வைத்து பராமரித்தும், பால்வியாபாரம் செய்தும் மாதம் ரூ.15,000/- சம்பாதித்து வந்துள்ளார். மேற்படி விபத்தினால் மனரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பாதிப்படைந்துள்ளார். மனுதாரர் அவரது பணிகளை கூட செய்ய முடியாமலும், தன்னால் நிற்கவோ, நடக்கவோ, வண்டி வாகனங்கள் ஓட்டவோ முடியாது என்றும், காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதால் விவசாய வேலைகளை செய்யவோ, கால்நடைகளை பராமரிக்கவோ முடிவதில்லை. இடது முழங்காலுக்கு கீழே தொடர்ந்து வலி ஏற்பட்டு கொண்டே இருந்ததால் திருப்பூர் ARS மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார். 1-ம் எதிர்மனுதாரர் மேற்படி மோட்டார் சைக்கிள் வாகனத்தின் ஓட்டுநர். 2-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர் மற்றும் 3-ம் எதிர்மனுதாரர் விபத்திற்கு காரணமான வாகனத்தை காப்பீடு செய்யப்பட்டுள்ள காப்பீட்டு நிறுவனம் ஆகும். எனவே, எதிர்மனுதாரர்கள் கூட்டாகவோ, தனித்தனியாகவோ ரூ.10,00,000/-ஐ நஷ்ட ஈடாக மனுதாக்கல் செய்த தேதியிலிருந்து 12% சதவிகித வட்டி சேர்த்து மனுதாரர்களுக்கு செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள் என்று தெரிவித்து இழப்பீடு கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 1-ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்யப்பட்டு 2-ம் எதிர்மனுதாரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-

இம்மனுவில் கூறப்பட்டுள்ள ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர, பிறவற்றை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனு

சட்டத்தின் படியும், சங்கதிகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனு சங்கதிகளை இம்மனுதாரரே உரிய ஆவணங்களின் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுவின் 23 வது பத்தியில் விபத்து குறித்து கூறிய அனைத்து சங்கதிகளையும் இந்த எதிர்மனுதாரர் மறுக்கிறார். TN 42 B 3394 என்ற வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநரின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பது பொய். இம்மனுதாரரின் வயது, தொழில், வருமானம் ஆகியவைகளை காண்பிக்கும் ஆவணங்களை தாக்கல் செய்யாத பட்சத்தில் மனு எடுத்து எடுப்பிலேயே தள்ளுபடி செய்யத்தக்கதாகும். மனுதாரரின் வயது, தொழில், வருமானம் ஆகியவை மறுக்கப்படுகின்றன. இந்த எதிர்மனுதாரர் TN 42 B 3394 என்ற மோட்டார் சைக்கிளை ஊஞ்சக்காடு முதல் செரவேலம்பாளையம் வரையிலான சாலையில் மணியம்மாள் நிலத்திற்கு அருகில், போக்குவரத்து விதிகளுக்கு உட்பட்டு தெற்கு சாதாரண வேகத்தில் ஓட்டி சென்று கொண்டிருந்தபோது, மனுதாரர் தானாக முன்வந்து விபத்தை ஏற்படுத்திக் கொண்டார். இந்த விபத்திற்கும், 1–ம் எதிர்மனுதாரருக்கு எந்த தொடர்பும் இல்லை. இந்த எதிர்மனுதாரருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. 25.02.2018–ம் தேதியன்று முதல் தகவல் அறிக்கை காலதாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்து நடந்த சமயத்தில் மோட்டார் சைக்கிள் 3–ம் எதிர்மனுதாரரிடம் பதிவு செய்யப்பட்டிருந்தது என்றும், மனுதாரருக்கு செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகைக்கு 3–ம் எதிர்மனுதாரர் பொறுப்பு ஆவார். மனுதாரருக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயங்கள் நிரந்தரமானவை அல்ல. எனவே இந்த மனுவை 1,2 எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

4. 3**–ம் எதிர்மனுதாரர் எதிருரையின் சுருக்கம்** :–

இம்மனுவில் கூறப்பட்டுள்ள ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர, பிறவற்றை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனு சட்டத்தின் படியும், சங்கதிகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனு சங்கதிகளை இம்மனுதாரரே உரிய ஆவணங்களின் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். கடந்த 22.02.2018–ம் தேதியன்று மாலை சுமார் 6.30 மணியளவில் சைக்கிளில் ஊஞ்சக்காடு, செலவேலம்பாளையம் ரோட்டில், மணியம்மாள் என்பவரது காட்டுக்கு அருகில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டின் ஓரமாக சென்று கொண்டிருந்தபோது, அப்போது எதிரே TN 42 B 3394 என்ற பதிவு எண்ணுள்ள மோட்டார் சைக்கிளை அதன் ஓட்டுநர் 1–ம் எதிர்மனுதாரர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய காயங்களுக்கு இழப்பீடாக ரூ.10,00,000/– கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவானது பொய்யானது, நிலைக்கத்தக்கதல்ல. இம்மனுதாரரின் வயது, தொழில், வருமானம் ஆகியவைகளை காண்கிக்கும் ஆவணங்களை தாக்கல் செய்யாத பட்சத்தில் மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யத்தக்கதாகும். மனுதாரரின் வயது, தொழில் வருமானம் மறுக்கப்படுகின்றன. TN 42 B 3394 என்ற பதிவு எண்ணுள்ள வாகனத்தின் ஓட்டுநர் விபத்து நடந்த நேரத்தில் செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் வைத்திருக்கவில்லை. மேற்படி வாகனத்தின் உரிமையாளர் செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் இல்லாத ஓட்டுநரிடம் தெரிந்தே வாகனத்தை ஒப்படைத்துள்ளார். இது மோட்டார் வாகன சட்டத்தின் விதிமீறல் ஆகும். எனவே இந்த 3–ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் வழங்க கடமைப்பட்டவர் அல்ல.

மனுதாரரின் மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 170–ன் கீழ் மனு தாக்கல் செய்து மனுவினை எதிர்க்கும் உரிமையை இந்த 3–ம் எதிர்மனுதாரர் தக்க வைத்துக்கொள்கிறார். எனவே இந்த 3–ம் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**5. <u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனைகள் என்னவெனில்</u>:–**

1. 3 ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 42 B 3394 என்ற பதிவு எண் கொண்ட மோட்டார் சைக்கிள் ஓட்டுநரரான 1–ம் எதிர்மனுதாரரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவு தான் விபத்திற்கு காரணமா?

2. மனுதாரருக்கு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கதா? அவ்வாறெனில் அதன் அளவு என்ன?

3. மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கும் பட்சத்தில் அதனை யார் செலுத்த வேண்டும் ?

**6.** மனுதாரர் தரப்பில், மனுதாரர் ஜோதிமணி என்பவர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, **ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.12** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் பிரதீப் மோட்டார் வாகன ஆய்வாளர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, **சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.3** வரையிலான சான்றாவணங்களும் எ.ம.சா.1 சாட்சியை தொடர்ந்து சுந்தரமூர்த்தி என்பவர் எ.ம.சா.2 ஆகவும், புகழகிரி என்பவர் எ.ம.சா.ஆ.3 ஆக விசாரிக்கப்பட்டு **எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.6** வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற சான்றாவணம் **நீ.ம.சா.ஆ.1** குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. **<u>பிரச்சனை எண்.1</u>:-**

**7.1** இந்த மனுவானது மனுதாரர் ஜோதிமணி கடந்த 22.02.2018-ம் தேதியன்று மாலை சுமார் 6.30 மணியளவில் சைக்கிளில் ஊஞ்சக்காடு, செலவேலம்பாளையம் ரோட்டில், மணியம்மாள் என்பவரது காட்டுக்கு அருகில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டின் ஓரமாக சென்று கொண்டிருந்தபோது, அப்போது எதிரே TN 42 B 3394 என்ற பதிவு எண்ணுள்ள மோட்டார் சைக்கிளை அதன் ஓட்டுநர் 1-ம் எதிர்மனுதாரர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், விபத்தில் மனுதாரருக்கு இடது கால் முழங்காலுக்கு கீழ் பலத்த எலும்பு முறிவும் இரத்தக்காயமும் வலது முழங்கையில் பலத்த அடியும், இரத்தக்காயங்கள் ஏற்பட்டு, உடனே அருகில் இருந்தவர்கள் திருப்பூர் ARS மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டதாகவும், பின்னர் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு 22.02.2018-ம் தேதியிலிருந்து உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு 27.02.2018-ம் தேதியில் மருத்துவமனையில் விடுவிக்கப்பட்டதாகவும், அதனால் மனுதாரருக்கு விபத்தில் ஏற்பட்ட பலத்த காயத்திற்கு இழப்பீடு கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.2.** இந்நிலையில், நீதிமன்றம் மூலம் திருப்பூர் மருத்துகுழுமத்திற்கு அனுப்பபட்டு ஜோதிமணி என்பவருக்கு ஏற்பட்ட காயங்களை ஆய்வு செய்து நிரந்தர ஊனச்சான்று வழங்க கேட்டு வந்த கடிதத்தின் பேரில் மனுதாரர் ஜோதிமணிக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு அவர் **14.09.2022** தேதியில் தங்களுடைய மருத்துவக்குழு முன்பு ஆஜரான

நிலையில் அவருக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டு அவருக்கு ஏற்பட்ட Distal 1/3rd tibia fracture, C/W over R elbow காயங்களில் உடல் இயலாமைக்கு 11 % குறிப்பிட்டு ஊனச்சான்றிதழ் வழங்கப்பட்டதாகவும், அந்த ஊனச்சான்றில் Distal 1/3rd tibia fracture என்று குறிப்பிட்டுள்ளது.

**7.3** இதற்கு மாறான வகையில் மனுதாரரின் இந்த மனுவை ஆட்சேபித்து 3.ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டு, அதில் மனுதாரருக்கு விபத்தில் ஏற்பட்டதாக சொல்லியுள்ள சங்கதிகள் மறுக்கப்பட்டுள்ளது. 1–ம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில் முறையான செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் இல்லை. அதனால், மனுதாரர் இந்த மனுவில் கோரியபடி மனுதாரருக்கு எந்தவொரு இழப்பீடும் இந்த 3–ம் எதிர்மனுதாரர் நிரூபணம் செலுத்த வேண்டியது இல்லையென்றும், அதனால் மனுதாரரின் இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தெரிவித்து எதிர்வழக்காடி வந்துள்ளார்கள்.

**7.4** இந்நிலையில் மனுதாரர் தரப்பில் தனது வழக்கை நிரூபணம் செய்யும் வகையில் மனுதாரர் ம.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். மனுதாரர் தனது சாட்சியத்தில், கடந்த 22.02.2018–ம் தேதியன்று மாலை சுமார் 6.30 மணியளவில் சைக்கிளில் ஊஞ்சக்காடு, செலவேலம்பாளையம் ரோட்டில், மணியம்மாள் என்பவரது காட்டுக்கு அருகில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டின் ஓரமாக சென்று கொண்டிருந்தபோது, அப்போது எதிரே TN 42 B 3394 என்ற பதிவு எண்ணுள்ள மோட்டார் சைக்கிளை அதன் ஓட்டுநர் 1–ம் எதிர்மனுதாரர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், விபத்தில் மனுதாரருக்கு இடது கால் முழங்காலுக்கு கீழ் பலத்த எலும்பு முறிவும்

ரத்தக்காயமும் வலது முழங்கையில் பலத்த அடியும், இரத்தக்காயங்கள் ஏற்பட்டு, உடனே அருகில் இருந்தவர்கள் திருப்பூர் ARS மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டது. பின்னர் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்ளுக்கு ஊடுகதிர், நுண்கதிர் படங்கள் எடுத்து பார்க்கப்பட்ட போது எலும்பு முறிவுக்கு அறுவை சிகிச்சை செய்து இரும்புதகடு பொருத்தப்பட்டதாகவும், மேலும், மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு 22.02.208 தேதியிலிருந்து உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு 27.02.2018–ம் தேதியில் மருத்துவமனையில் விடுவிக்கப்பட்டதாகவும், பின்னர் திருப்பூர், ARS மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் ஊத்துக்குளி உதவி ஆய்வாளர் மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஜோதிமணி என்பவரிடம் புகார் வாக்குமூலத்தை பெற்று ஊத்துக்குளி காவல்நிலையத்தாரால் குற்ற எண்.91/2018 இதச பிரிவுகள் 279, 337–ன் படி TN 42 B 3394 என்ற வாகனத்தில் ஓட்டுநர் மீது முதல் தகவல் அறிக்கை **ம.சா.ஆ.1** பதிவு செய்யப்பட்டுள்ளது. **ம.சா.ஆ.6** குற்ற அறிக்கையில் TN 42 B 3394 என்ற பதிவெண் கொண்ட மோட்டார் சைக்கிள் வான ஓட்டுநரான 1–ம் எதிர்மனுதாரர் தான் குற்றவாளியாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல், விபத்த நடந்த இடத்தை காட்டும் வகையில் மனுதாரர்கள் தரப்பில் மாதிரி வரைபடம் **ம.சா.ஆ.2** ஆகவும், பார்வை மகஜர் **ம.சா.ஆ.3** ஆகவும் தாக்கல் செய்துள்ளார்கள். இந்த நிலையில், இந்த வழக்கு விபத்தில் 1–ம் எதிர்மனுதாரர் ஓட்டி சென்ற TN 42 B 3394 என்ற இரண்டு சக்கர வாகனம் சம்மந்தப்பட்டு வழக்கு விபத்து ஏற்படுத்தி உள்ளது என்பது ஊர்ஜிதமாகிறது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் பிரதீப் அவிநாசி மோட்டார் வாகன ஆய்வாளர் எ.ம.சா.1 விசாரிக்கப்பட்டு,

சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எ.ம.சா.1 சாட்சியை தொடர்ந்து சுந்தரமூர்த்தி என்பவர் எ.ம.சா.2 ஆகவும், 3–ம் எதிர்மனுதாரர் புகழகிரி எ.ம.சா.3 விசாரிக்கப்பட்டு, எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மோட்டார் வாகன ஆய்வாளர் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் இந்த வாகனத்தில் ஹெட்லைட் அமைப்பு சேதமடைந்துள்ளது. முன்புற வலது பக்க இண்டிகேட்டர் மற்றும் முன்புற வலது பக்க மட்கார்ட் (mudguard) ஆகியவை சேதாரங்கள் ஏற்பட்டுள்ளது என்பது **ம.சா.ஆ.4** மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையை பரிசீலித்த வகையில் தெரிய வருகிறது. இந்நிலையில், இந்த வழக்கு விபத்திற்கு விபத்து சமயம் விபத்தில் சம்மந்தப்பட்ட 1–ம் எதிர்மனுதாரர் TN 42 B 3394 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்துள்ளார் என்பதும், குற்ற வழக்கு ஆவணத்தின் படி இவ்வழக்கு விபத்தானது மோட்டார் சைக்கிள் வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநரான 1–ம் எதிர்மனுதாரரின் அஜாக்கிரதையும், அதிவேகமும், கவனக்குறைவும் தான் காரணம் என்பது ஊர்ஜிதமாகிறது.

**7.5** இந்நிலையில், இவ்வழக்கு விபத்தானது TN 42 B 3394 மோட்டார் சைக்கிள் வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநரான 1ம் எதிர்மனுதாரரின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் விபத்திற்கு காரணம் என்பதை மனுதாரர் தனது வாய்மாழி சாட்சியத்தின் மூலமும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் நிரூபணம் செய்துள்ளார். மனுதாரரின் வழக்கிற்கு ஆதரவான வகையில் முதல் தகவல் அறிக்கை, குற்ற அறிக்கை, பார்வைமகஜர், மோட்டார் வாகன ஆய்வறிக்கை உள்ளது. இந்நிலையில், மாண்புமிகு உச்சநீதிமன்றம்

பிறப்பித்த முன் தீர்ப்பான **2014 (4) SCC 511 Meera Devi and another Vs. H.R.T.C and others** என்ற முன் தீர்ப்பில், 1–ம் எதிர்மனுதார் மனுதாரர் மீது கவனக்குறைவு என்ற சங்கதியை முன் வைத்தால் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் எதிர்மனுதாரரே அதனை நிரூபிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. அதேபோல், நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் **S.Muthu Vs, Managing Director, TNSTC** என்ற முன் தீர்ப்பில் விபத்து இழப்பீடு கோரும் வழக்கில் கவனக்குறைவு என்ற சங்கதியானது, சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட தேவையில்லை என்றும், அதனை பெரும்பான்மை சங்கதிகளின் அடிப்படையிலேயே நிரூபிக்கலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த வழக்கில் 3–ம் எதிர்மனுதாரரின் எதிர்வாத கூற்றை நிரூபணம் செய்யும் வகையில் உரிய சாட்சியங்கள், சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்துள்ள நிலையிலும், பெரும்பான்மை கோட்பாட்டின் அடிப்படையிலும் TN 42 B 3394 என்ற மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த ஓட்டுநரான 1–ம் எதிர்மனுதாரர் தான் மோட்டார் சைக்கிளை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து சைக்கிளில் சென்று கொண்டிருந்த மனுதாரரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி உள்ளார் என்று பிரச்சனை எண்.1–க்கு முடிவு காணப்படுகிறது.

8. <u>**பிரச்சனை எண்2**</u>:–

**8.1** மனுதாரருக்கு கடந்த 22.02.2018–ம் தேதியன்று வாகன விபத்து ஏற்பட்டு அந்த விபத்தில் அவருக்கு அவரது இடது கால் முழங்காலுக்கு கீழ் பலத்த எலும்பு முறிவும்,, இரத்தக்காயமும், வலது முழங்கையில் பலத்த அடியும், இரத்தக்காயங்கள் ஏற்பட்டு, அதற்காக மனுதாரர் சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும் மனுதாரர் தரப்பில்

சொல்லப்பட்டுள்ளது. அதனை நிரூபிக்கும் விதத்தில் ம.சா.ஆ.5 காயச்சான்றிதழ், மருத்துவ பில்கள் ம.சா.ஆ.9, ஊடுகதிர் படங்கள் ம.சா.ஆ.10 வரையிலான சிகிச்சை எடுத்துக்கொண்டது சம்பந்தமான மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில், இவ்வழக்கு விபத்திற்கு 1–ம் எதிர்மனுதாரரின் மோட்டார் சைக்கிள் வாகன ஓட்டுநரே காரணம் எனவும், பிரச்சனை எண்.1ல் முடிவு காணப்பட்டுள்ள நிலையில், மேற்படி விபத்திற்கு 1–ம் எதிர்மனுதாரான ஓட்டுநரே காரணம் என்பதும், அந்த விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் குமாரசாமி என்தும், அந்த வாகனத்தின் உரிமையாளர் 2–ம் எதிர்மனுதாரர் என்பதும், அந்த வாகனத்தின் காப்பீட்டாளர் 3–ம் எதிர்மனுதாரர் நிறுவனம் என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், விபத்தில் ஏற்பட்ட இழப்பீட்டை செலுத்த 3–ம் எதிர்மனுதாரர் கடமைப்பட்டவர் என்று முடிவு செய்யப்படுகிறது. இந்நிலையில், இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் உரிமையாளரான 2–ம் எதிர்மனுதாரரை பொறுத்தவரையில் இந்த மனுதாரர் 3–ம் தரப்பினர் ஆவார். எனவே 1–ம் எதிர்மனுதாரர் குமாரசாமி என்பவர் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தி வாகனத்தின் காப்பீடு பாலிசி நிபந்தனை மீறப்பட்டுள்ள நிலையில், மனுதாரருக்கு செலுத்தப்பட வேண்டிய இழப்பீட்டை TN 42 B 3394 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் காப்பீட்டாளரான 3–ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு கொடுத்துவிட்டு, அதனை பின்னிட்டு வாகனத்தின் உரிமையாளரான 2–ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக் கொள்ள வேண்டும் என்று பிரச்சனை எண்.2–க்கு தீர்வு காணப்படுகிறது.

9. <u>பிரச்சினை எண்3</u>:–

**9.1** இந்த வழக்கு விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு திருப்பூர் மருத்துவ குழுமத்தினரால் உடல் இயலாமைக்காக 11% சதவீதம், குறிப்பிட்டு ஊனச்சான்று கொடுக்கப்பட்டுள்ளது. அந்த ஊனச் சான்று **நீ.ம.சா.ஆ.1** ஆக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள **ம.சா.ஆ.8** சிகிச்சை விபர அறிக்கை குறிப்பிலிருந்து மனுதாரருக்கு இடது கால் முழங்காலுக்கு கீழ் பலத்த எலும்பு முறிவும் ரத்தக்காயமும் வலது முழங்கையில் பலத்த அடியும் ஏற்பட்டு அதற்காக மனுதாரர் கடந்த **22.02.2018**–ம் தேதியில் திருப்பூரில் உள்ள ARS மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு 27.02.2018–ம் தேதி வரையில் சிகிச்சை எடுத்துக் கொண்டுள்ளார் என்பது தெரிய வருகிறது. மேற்கண்ட ம.சா.ஆ.8 சிகிச்சை விபர அறிக்கை ஆவணத்தில் மனுதாரருக்கு,

**<u>FINAL DIAGNOSIS:</u>**

**1. Distal 1/3rd Tibia Fracture – Left**

**2. CLW Over Right Elbow**

என்ற காயங்கள் ஏற்பட்டு இருந்ததாகவும், அந்த காயங்களுக்கு மரபு முறையில் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது என்தும் தெரிய வருகிறது.

**9.2.** இந்நிலையில், மனுதாரருக்கு இடது கால் முழங்காலுக்கு கீழ் பலத்த எலும்பு முறிவும் ரத்தக்காயமும் வலது முழங்கையிலும் ஏற்பட்ட பலத்த காயத்திற்கு உடல் இயலாமைக்காக 11% சதவீதம் குறிப்பிட்டு ஊனச்சான்று திருப்பூர் மருத்துவ குழுமத்தினரால் நீ.ம.சா.ஆ.1 கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஊனச்சான்று வழங்கிய மருத்துவர்களை

சாட்சியாக அழைத்து இவ்வழக்கில் விசரிக்கப்படவில்லை. இந்நிலையில், இடது முழங்காலுக்கு கீழே எலும்பு முறிந்தும், வலது முழங்கையில் பலத்த அடியும் இரத்தக்ககாயமும் ஏற்பட்ட கொடுங்காயத்தின் தன்மையை பொறுத்து நீ.ம.சா.ஆ.1ல் உடல் இயலாமைக்காக 11% சதவீதம் என்று குறிப்பிட்டு உள்ள நிலையில் அந்த 11% சதவீதத்தையே இந்த தீர்ப்பாயம் கணக்கிற்கு எடுத்து கொண்டு அதன் அடிப்படையில் 1% நிரந்தர ஊனத்திற்கு ரூ.8,000/- என நிர்ணயித்து மனுதாரரின் நிரந்தர ஊனத்திற்கான இழப்பீடு 11 x 8,000 = ரூ.**88,000/-** என நிர்ணயிக்கப்படுகிறது. மேலும் மனுதாரர் தான் விவசாயம் செய்தும், பால் கறவை மாடுகள் வைத்து பராமரித்து பால்வியாபாரம் மூலம் மாதம் ரூ.15,000/- மாத வருமானம் வந்தது என்பதை காண்பிக்கும் வகையில் எவ்வித சாட்சிய சான்றாவணங்களையும் முன்நிறுத்தவில்லை. எனவே, மனுதாரரின் சிகிச்சை விபர அறிக்கை குறிப்பில் விபத்து நடந்த தேதியில் மனுதாரருக்கு வயது 45 ஆகும். அதனால், மனுதாரரின் தோராய வருமானமாக மாதம் ரூ.7,000/- நிர்ணயிக்கப்படுகிறது. இந்நிலையில், மனுதாரர் 22.02.2018-ம் தேதியில் இருந்து 27.02.2018 தேதி வரை மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றிருக்கிறார். அவருடைய தோராய மாத வருமானம் ரூ.7,000/- ஆக நிர்ணயிக்கப்பட்ட நிலையில், அவர் விபத்தில் ஏற்பட்ட காயங்களால் சுமார் 3 மாதங்கள் வேலைக்கு செல்ல முடியாமல் இருந்திருக்கலாம் என முடிவு செய்து, அவரின் வருமான இழப்பாக 3 x 7,000 = ரூ.**21,000/-** நிர்ணயிக்கப்படுகிறது.

**9.3.** மனுதாரர் தனது மருத்துவ செலவு **ரூ.78,881/-**க்கும் மேல் செலவு ஏற்பட்டதற்காக தெரிவித்து, அதற்கு ஆதரவாக காயச்சான்றிதழ் **ம.சா.ஆ.5**, சிகிச்சை விபர அறிக்கை **ம.சா.ஆ.8,** மருத்துவ பில் ரசீதுகள்

**ம.சா.ஆ.9** ஆக ஒப்படைத்துள்ளார். அந்த மருத்துவ பில்களில் கண்ட தொகை **ரூ.78,881/–** மனுதாரருக்கு சட்டப்படி கிடைக்கத்தக்கது ஆகும். அதேபோல், மனுதாரரர் போக்குவரத்து செலவிற்காக தோராயமாக **ரூ.15,000/–** என்று கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. மேலும், மனுதாரருக்கு விபத்தில் கொடுங்காயங்கள் ஏற்பட்டு அவருக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், மனுதாரருக்கு அவரது இடது முழங்காலுக்கு கீழே எலும்பு முறிந்தும், வலது முழங்கையில் பலத்த அடியும் ஏற்பட்ட கொடுங்காயத்திற்கு மனுதாரரின் வலி மற்றும் வேதனைக்காக **ரூ.75,000/–**மும், அவருக்கு வசதி வாய்ப்பு குறைவிற்காக **ரூ,20,000**/– தர தக்கது என தீர்மானிக்கப்படுகிறது. மேலும், அவரது ஊட்டச்சத்து மற்றும் உடனிருந்தோர் செலவு தொகையாக **ரூ.20,000/–மும்,** அவரது ஆடை ஆபரண சேதத்திற்காக **ரூ.2,000**/–மும் தர தக்கது என இந்த தீர்ப்பாயம் முடிவு செய்யப்படுகிறது.

| **வ.எண்** | **இழப்பீட்டிற்கான தலைப்புகள்** | **தொகை விபரம்** |
|---|---|---|
| 1 | நிரந்தர ஊனம் மற்றும் நிரந்தர வருவாய் இழப்பிற்காக **(11% x ரூ.8,000 = ரூ.88,000/–)** | ரூ. 88,000/– |
| 2 | மருத்துவ செலவு | ரூ . 78,881/– |
| 3 | போக்குவரத்து செலவு | ரூ. 15,000/– |
| 4 | ஊட்டச்சத்து, மற்றும் உடனிருந்தோர் செலவுத் தொகை | ரூ. 20,000/– |
| 5 | வலி மற்றும் வேதனை | ரூ. 75,000/– |
| 6 | வசதி இழப்பு | ரூ. 20,000/– |
| 7 | ஆடை ஆபரண சேதத்திற்கு | ரூ. 2,000/– |

| | | |
|---|---|---|
| 8 | வருமான இழப்பிற்கு (3 x 7,000 = 21,000) | ரூ. 21,000/- |
| | **மொத்தம்** | **ரூ. 3,19,881/-** |

**முடிவாக, இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.3,19,881/-ஐ 3-ம் எதிர்மனுதாரர் செலுத்திவிட்டு, பின்னிட்டு வாகனத்தின் உரிமையாளரான 2-ம் எதிர்மனுதாரரிடமிருந்து அந்த தொகையை வசூலித்துக் கொள்ள வேண்டியது என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்கு மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகையை வைப்பீடு செய்யும் நாள் வரையில் ஆண்டுக்கு 7.5% வட்டியுடன் வழக்கு செலவுத் தொகையையும் சேர்த்து 2 மாத காலத்திற்குள் INDIAN BANK, A/c.7761848987, IFSC No.IDIB000A157 AVINASHI BRANCH ல் உள்ள இத்தீர்ப்பாயத்தின் MACT வங்கி கணக்கில் 3-ம் எதிர்மனுதாரர் NEFT அல்லது RTGS மூலம் வைப்பீடு செய்ய வேண்டும் என்றும், பின்னிட்டு வாகனத்தின் உரிமையாளரான 2-ம் எதிர்மனுதாரரிடமிருந்து அந்த தொகையை வசூலித்துக் கொள்ள வேண்டியது என்றும், மனுதாரர் இழப்பீட்டு தொகையை இத்தீர்ப்பாயத்தில் உரிய மனு செய்வதன் மூலம் நேரடியாக பெற்றுக் கொள்ளலாம் என்றும், மனுதாரர் செலுத்த வேண்டிய மீதி நீதிமன்ற கட்டணத்தை 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்றும், மனுதாரரின் வழக்குரைஞர் கட்டணம் ரூ.5,398/-ஐ 3-ம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தாளரிடம், நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஜுலை 02–ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

C SENTHIL KUMAR Digitally signed by C SENTHIL KUMAR Date: 2026.07.02 17:48:05 +0530

**சார்பு நீதிபதி,**
**அவிநாசி.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>:–**

ம.சா.1 – ஜோதிமணி (மனுதாரர்)

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>:–**

| | | | |
|---|---|---|---|
| **ம.சா.ஆ.1** | 25.02.2018 | முதல் தகவல் அறிக்கை | சான்றிட்ட நகல் |
| **ம.சா.ஆ.2** | – | மாதிரி வரைபடம் | சான்றிட்ட நகல் |
| **ம.சா.ஆ.3** | 26.02.2018 | பார்வை மகஜர் | சான்றிட்ட நகல் |
| **ம.சா.ஆ.4** | – | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை | கணினி நகல் |
| **ம.சா.ஆ.5** | 27.02.2018 | காயச்சான்றிதழ் | அசல் |
| **ம.சா.ஆ.6** | 25.02.2018 | குற்ற அறிக்கை | அசல் |
| **ம.சா.ஆ.7** | – | கீழமை நீதிமன்ற தீர்ப்புரை | சான்றிட்ட நகல் |
| **ம.சா.ஆ.8** | 22.02.2018 to 27.02.2018 | சிகிச்சை விபர அறிக்கை | கணினி நகல் |
| **ம.சா.ஆ.9** | – | மருத்துவ செலவு பில்கள் | அசல் |
| **ம.சா.ஆ.10** | – | ஊடுகதிர் படங்கள்–2 | அசல் |
| **ம.சா.ஆ.11** | – | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டவை) | கணினி நகல் |

| | | | |
|---|---|---|---|
| **ம.சா.ஆ.12** | – | வங்கி கணக்கு புத்தகம் | நகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>:–**

எ.ம.சா.1 பிரதீப் (அவிநாசி, மோட்டார் வாகன ஆய்வாளர்)

எ.ம.சா.2 சுந்தரமூர்த்தி

எ.ம.சா.3 புகழகிரி (3–ம் எதிர்மனுதாரர்)

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>:–**

| | | | |
|---|---|---|---|
| **எ.ம.சா.ஆ.1** | – | TN 42 B 3394–வாகனத்தின் காப்பீடு | கணினி நகல் |
| **எ.ம.சா.ஆ.2** | – | 1–ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய அறிவிப்பு | அலுவலக நகல் |
| **எ.ம.சா.ஆ.3** | – | 1–ம் எதிர்மனுதாரர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் |
| **எ.ம.சா.ஆ.4** | – | 2–ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய அறிவிப்பு | அலுவலக நகல் |
| **எ.ம.சா.ஆ.5** | | 2–ம் எதிர்மனுதாரர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் |
| **எ.ம.சா.ஆ.6** | – | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை TN 42 B 3394 | கணினி நகல் |

**<u>சாட்சிய சான்றாவணங்கள்</u>:–**

| | | | |
|---|---|---|---|
| **சா.சா.ஆ.1** | – | மோட்டார் வாகன ஆய்வாளர் வழங்கிய கடிதம் | அசல் |
| **சா.சா.ஆ.2** | – | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை | கணினி நகல் |
| **சா.சா.ஆ.3** | | இரு சக்கர வாகனத்தை ஓட்டிய | உண்மை |

| | | | |
|---|---|---|---|
| | | குமாரசாமி என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் சான்று இல்லாததால் அவருக்கு ரூ.2,000/- அபராதம் வசூலிக்கப்பட்டது என்பதை காட்டக்ககூடிய சோதனை அறிக்கை | நகல் |

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u>:-**

**நீ.ம.சா.ஆ.1** ஊனச்சான்றிதழ் அசல்

C SENTHIL KUMAR Digitally signed by C SENTHIL KUMAR Date: 2026.07.02 17:48:16 +0530

**சார்பு நீதிபதி,**
**அவிநாசி.**

சீரான/வரைவு உத்தரவு
மோ.வா.வி.கோ.தீ.ம.எண்.39/2018
நாள். 02.07.2026